வேண்டுமென்கின்ற உணர்வு எங்களுக்கு இருப்பதால், எங்களுடைய உணர்வை மதிக்கின்ற வகையிலே தென் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் தென் மாவட்ட வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயபால், சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, உட்காருங்கள்.

திரு. எஸ். ஜெயபால்: கன்னியாகுமரி மாவட்டத்திலும் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாமன்றத்தின் உறுப்பினரின் உணர்ச்சிகளை மதிக்கின்றேன். நிச்சயமாக எதிர்காலத்தில் இந்தத் துறை இன்னும் அதிக அளவில் வளர்ச்சியடைந்து, வேலைவாய்ப்புகள் பெருகும்போது, priority basis-ல் நிச்சயமாக, உங்கள் மாவட்டத்திலே இடம் கிடைத்தால் ஒரு பூங்கா அமைப்பதற்கு இவ்வரசு எல்லா வகையிலும் முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. உரிமை மீறல் பிரச்சினை

'முரசொலி'யில் எழுதியுள்ள கடிதம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர்மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடன்பிறப்புகளுக்கு ஒரு

2010 மே 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கடிதம் என்ற ஒரு செய்தி இன்றைய முரசொலி பத்திரிகையிலே வந்திருக்கின்றது. அது குறித்து நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனையைக் கொடுத்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். நீங்கள் இன்றைக்குக் காலையில் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ப்ரிசீலனையில் இருக்கிறது. நான் அதைப் படித்துப் பார்த்து அதற்குப் பிறகு முடிவெடுக்கிறேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்று காலையில்தான் பேப்பரில் வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்றைக்குக் காலையில் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நாளைக்கு எடுத்துக்கொள்கிறீர்களா?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சபையில் raise பண்ணலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபை ஆரம்பித்த பிறகு, நீங்கள் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்துவிட்டு, உரிமை மீறல் என்றால் என்ன அர்த்தம்? நான் படித்துப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) Raise பண்ணினால், அதற்குப் பதில் சொல்வதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா? They must be given time. நீங்கள் 9-58-க்கு என்னிடம் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் படித்துப் பார்க்க வேண்டும். 9-00 மணிக்கு முன்பாகக் கொடுக்க வேண்டும். என்னிடம் கொடுப்பதாக இருந்தால், 9 மணிக்குள் கொடுக்க வேண்டும். 9-58-க்கு என்னிடம் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அதை இப்போதே எடுங்கள் என்றால் என்ன அர்த்தம்? இது முறையா? படித்துப் பார்த்து, அதற்குப் பிறகுதான் பரிசீலனை செய்ய முடியும். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கொஞ்சம் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பேசும்போது நீங்கள், மற்றவர்கள் எழுந்து நின்றால், அது முறையில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்மீது ஓர் உரிமைப் பிரச்சினையை

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்து தங்களிடத்திலே கொடுத்திருப்பதாகவும், அது முன்கூட்டியே தரப்படவில்லை; உரிய நேரத்தில் தரப்படவில்லை; இப்போதுதான் சில நிமிடங்களுக்கு முன்பு தரப்பட்டது; எனவே, அது ஆய்விலே இருக்கிறது; பிறகு தீர்ப்புக் கூறப்படும் என்று தாங்கள் சொல்லி இருக்கின்றீர்கள். ஆனால் நான், இங்கே உள்ள உரிமை பிரச்சினைக்கான விதிமுறைகள், சட்ட திட்டங்கள், இவற்றையெல்லாம் தாங்கள் ஆழமாகக் கவனிக்காமல் இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்போதுதான் உரிமைக் குழு கூடும். அந்தக் கூட்டத்திற்கு எனக்கும் அழைப்பு அனுப்பப்படும். இவ்வளவு பெரிய மன்றத்திலே சொல்ல முடியாத, சொல்லாமல் விட்டுப் போன பல விஷயங்களை உரிமைக் குழுவிலே சொல்வதற்கு எனக்கு வாய்ப்பும், வசதியும் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

ஆகவே தயவுசெய்து, விதிமுறைகளைப் பார்க்காமல், சட்ட திட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த அவையில் கடந்த காலத்திலே உரிமைப் பிரச்சினைகளுக்கெல்லாம் என்ன கதி ஏற்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், இது கருணாநிதிமீது தந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினை என்ற முறையிலே, அதுவும் நம்முடைய அருமை நண்பர் பன்னீர்செல்வம் தந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினை என்ற முறையில், அந்த உரிமையோடு எடுத்துக்கொண்டு, உரிமைக் குழுவிற்கு அதைத் தாங்கள் விடவேண்டும். உரிமைக் குழுவிற்கு அதை அனுப்பினால், அங்கே நான் அதைப் பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு (குறுக்கீடுகள்) இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை இன்று எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை விதி 226-ன்கீழ் இப்பிரச்சினை குறித்து விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன். (குறுக்கீடுகள்) இனி, அடுத்த பொருளுக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) இதில் விளக்கம் எல்லாம்

2010 மே 12] [பேரவைத் தலைவர்]

கேட்கத் தேவையில்லை. இனி குழு பார்த்துக்கொள்ளும். இந்தப் பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உரிமைக் குழுவிற்கு அனுப்பியதற்குப் பிறகு இனி இங்கே பேச வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) இனி பார்க்க வேண்டியது உரிமைக் குழுதான். உரிமைக் குழுதான் அதில் உரிமை மீறல் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்தில் தானியங்கி பணம் எடுக்கும் மையத்தில். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு அமைச்சர் ஒரு செய்தித் தாளைக் காண்பித்தார்.)

இதைப் படிக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்சினை எதன் அடிப்படையிலே வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறார். அப்படி அவர் எடுத்துச் சொல்வதாக இருந்தால், எழுதப்பட்ட செய்தி என்ன, பத்திரிகையிலே வந்த செய்தி என்ன என்பதை அவர் முழுவதுமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய 'முரசொலி' பத்திரிகையில் செய்தி ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே 'உடன்பிறப்புக்கு' என்ற போர்வையில் (குறுக்கீடுகள்) சில அறிக்கைகளை இங்கே (குறுக்கீடுகள்) சரி, விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலில் உங்களுடைய வேண்டுகோள் என்பதே அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதுதான். உங்களுடைய வேண்டுகோள் இப்போது

நிறைவேற்றப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகும் நீங்கள் இந்த issue-வைத் திரும்பத் திரும்பப் பேச வேண்டுமென்று நினைத்தால், அதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறதாகத்தான் நினைக்க வேண்டியுள்ளது. (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கத்தைத் தங்களிடம் நான் எதிர்பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) Please. அதாவது, பேரவைத் தலைவருடைய தீர்ப்பு இறுதியானது. தாங்கள் இந்தப் பிரச்சினை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்படும் என்று சொல்லிவிட்டீர்கள். சொல்லிவிட்ட பிறகு அதே பொருளைப் பற்றி நீங்கள் பேச அனுமதித்தால், அது அவையினுடைய மரபல்ல. (குறுக்கீடுகள்) அப்படிப்பட்ட ஒன்றை (குறுக்கீடுகள்) எனக்கு ஒன்றுமிலலை. நீங்கள் அனுமதித்தால், நாங்கள் பதில் சொல்ல வேண்டுமென்றால் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) ஏனென்று கேட்டால், (குறுக்கீடுகள்) பேரவை விதி 226-ன் பிரகாரம், "Speaker may suo motu refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation and report" என்று இருக்கிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்புக் கொடுத்த பிறகு, மறுபடியும் அதன்மீது விவாதத்தை ஆரம்பிக்கலாமா என்பதுதான். விவாதம் இல்லாமலேயேகூட, "The Speaker may suo motu refer any question of privilege to the Committee of Privileges" என்று பேரவை விதி 226-ல் இருக்கிறது. நீங்கள் அதில் பேச வேண்டுமென்றால் பேசுங்கள். ஆனால், it is not proper to speak in the House. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்ன கோரிக்கை வைத்தீர்களோ, அதைப் பெருந்தன்மையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, நீங்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகும் நீங்கள் அந்த issue விஷயமாகப் பேச வேண்டுமென்று சொன்னீர்களென்றால், இதில் ஏதோ உள்நோக்கத்தோடு நீங்கள் பேசுவதாகத்தான் தெரிகிறதே தவிர, வேறல்ல. (குறுக்கீடுகள்) இதுகுறித்து உரிமைக் குழுதான் கூடி முடிவெடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) No. No. இனி அதில் முடிவெடுக்க வேண்டியது, குழு. (குறுக்கீடுகள்) என்னுடைய

தீர்ப்பிற்கு மேலே எதையும் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அவையில் ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினர்மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தால், அவர் கோருவது, இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்பதாகும். அதைப்போலத்தான் இப்போது என்மீது கொண்டு வரப்பட்ட உரிமைப் பிரச்சினையில் எதிர்க்கட்சி கோருவது, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதாகத்தான் இருக்க முடியும். அதை நானே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். "உரிமைக் குழுவிற்கு விடக்கூடாது" என்று நான் சொன்னால்தான் விவாதம். உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று அவர்கள் சொல்வார்கள். "விடக்கூடாது" என்று நான் சொல்வேன். அந்த விவாதம் நடைபெற்று, முடிவில் அவைத் தலைவராகிய தாங்கள் ஒரு தீர்ப்பளிப்பீர்கள். அந்தச் சிரமத்திற்கு இடமில்லாமல், "இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை" என்று குறிப்பிட்ட பிறகும், இதிலே வாதம் ஏன் விவாதம் ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பேரவை விதி 226-ன்கீழ் நான் முடிவு எடுத்ததற்குப் பின்னாலே, இதன்மீது பேசுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அடுத்த subject-க்குப் போகிறேன். (குறுக்கீடுகள்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், தானியங்கி மையக் காவலரால் காவல் துறை துணை ஆய்வாளர் சுடப்பட்டு உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்தில் தானியங்கி பணம் எடுக்கும் மையத்தில் காவல் துறை சார் ஆய்வாளர் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்தது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார்,

[பேரவைத் தலைவர்] [2010 மே 12

திரு. ஆர்.கே. பாரதி மோகன், திருமதி இளமதி சுப்பிரமணியன், திரு. எம்.வி.ஆர். வீரகபிலன், திரு. எல். ரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், ம.தி.மு.க. சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோர் விதி 56 மற்றும் 55-இன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். (குறுக்கீடுகள்) இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அ.இ.அ.தி.மு.க. சார்பாக யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு இருந்தனர்.)

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

3. உரிமை மீறல் பிரச்சினை—தொடர்ச்சி

'முரசொலி'யில் எழுதியுள்ள கடிதம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர்மீது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரிமைக் குழுவில் சென்று என்ன வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள். என்ன இருக்கிறதோ, அதை அங்கு சொல்லிக்கொள்ளுங்கள். நான் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிட்டேன். (குறுக்கீடுகள்) இப்போது அனுமதிக்க முடியாது. வேறு யாரும் இதில் தலையிடாதீர்கள். நான் உரிமைக் குழுவிற்கு அனுப்பிவிட்டேன். நீங்கள் உரிமைக் குழுவிற்கு சென்று பேசிக்கொள்ளுங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

2010 மே 12]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்). தஞ்சை மாவட்டம், பாபநாசத்திலே . . .

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர், "சர்வாதிகார சபாநாயகர் ஒழிக" என்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒழிக' என்று கூச்சலிட்டுக்கொண்டிருக்கின்ற உறுப்பினர்களை அவைத் தலைவர் அவர்கள் name செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. கோ. அரி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. டி. ஜெயக்குமார், திரு. வி.பி. கலைராஜன், திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் அவையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் (திரு. எல். ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. க. இராஜேந்திரன் ஆகியோர் தவிர) மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், தானியங்கி மையக் காவலரால் காவல் துறை துணை ஆய்வாளர் சுடப்பட்டு உயிரிழந்தது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.இ.அ.தி.மு.க. சார்பாகப் பேசுவதற்கு யாரும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 10-55

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் பாரத ஸ்டேட் வங்கிக்குச் சொந்தமான ஒரு தானியங்கி காசு